# Neurochemical Mediators in Emotion Regulation and Somatic Expression in Gnana Nondi Natakam

**S. Smilin Sheeba**
*Research Scholar, Department of Tamil*
*Madras Christian College, Chennai*

**Dr. D. Meshak**
*Assistant Professor and Head, Department of Tamil*
*Madras Christian College, Chennai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI: https://doi.org/10.5281/zenodo.18981542

**Abstract**
*Human emotions are no longer understood merely as individual psychological experiences; rather, they are integrated phenomena that emerge through the combined functioning of neurochemical, biological, and cognitive processes. This article examines the Tholkappiyamconcept of somatic expressions (Meippadu) found in Tamil literary theory from the perspective of neurochemistry. Vedhanayaga Sasthriyar's Gnana Nondi Natakam is taken as the primary textual data, and the eight somatic expressions defined in Tholkappiyamis comparatively analyzed in relation to the functional roles of neurotransmitters and hormones such as dopamine, serotonin, cortisol, norepinephrine, oxytocin, and GABA in the generation of emotions. Through this comparative analysis, the study identifies how emotional states arise from neurochemical activity and expressed as Meippaduin literary representation. The article further demonstrates how Vedhanayaga Sasthriyar employs the somatic expressions with exceptional aesthetic and functional precision in Gnana Nondi Natakam. The study ultimately establishes that Tamil literary theories conceptualize emotions as embodied experiences and that they anticipate key insights of modern affective science.*
***Keywords:*** *Eight Somatic Expressions, Neuro-Chemical Mediators,Gnana Nondi Natakam, Christian Literature, Minor Literature, Tholkappiyam*

**References**

1. Shanmugam, S. V., kavithaikattamaippu, Chennai: New Century Book House Pvt. Ltd., 2013.
2. Shanmugam Pillai, M., Tolkappiyam – Ilampuranam Porulathikaram (Third Part), Chennai: Mullai Nilayam, 2014.
3. Moses Michael Faraday, Muthamizhmuthukalmoondru, Chennai: Kiruba Publications, 2015.
4. VedhasagayakumarM., Ilakkiya Thiranaaivukkalanchiam, Trichy: Adaiyaalam, 2021.
5. Crystal Raypole, How to Hack Your Hormones for a Better Mood – https://www.healthline.com/health/happy-hormone, May 28, 2025.
6. Mangalam Ramanathan, Hormones and Chemicals Linked with our Emotion –https://www.amrita.edu/news/hormones-and-chemicals-linked-with-our-emotion/, October 15, 2018
7. Wellness Hospital, The Neurochemistry of Emotions: Unveiling the Science Behind Feelings – https://wellnesshospitals.in/the-neurochemistry-of-emotions-unveiling-the-science-behind-feelings/, June 5, 2023.

# ஞான நொண்டி நாடகத்தில் நியூரோ வேதியியல் நடுநிலையாளர்கள் நோக்கில் எண்வகை மெய்ப்பாடுகள்

***சா. ஸ்மைலின் ஷீபா***
முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, கிழக்கு தாம்பரம், சென்னை

***முனைவர் து. மேஷாக்***
உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, கிழக்கு தாம்பரம், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*மனித உணர்வுகள் தனிப்பட்ட உளவியல் அனுபவங்களாக மட்டும் புரிந்துகொள்ளப்படுவதில்லை, நியூரோ வேதியியல், உயிரியல் மற்றும் அறிவாற்றல் செயல்முறைகளின் கூட்டு முயற்சியில் உருவாகும் ஒருங்கிணைந்த நிகழ்வுகளாகும். இலக்கியங்களில் மனித உணர்வுகள் அவரவர் புரிதலுக்கு ஏற்ப வெளிப்படுத்தப்படுகின்றன., தமிழிலக்கியத்தில் காணப்படும் மெய்ப்பாடு என்ற தொல்காப்பியரின் கோட்பாட்டினை, நரம்பியல் வேதியியல் பார்வையில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. வேதநாயக சாஸ்திரியார் இயற்றிய ஞான நொண்டி நாடகத்தைத் தரவாக எடுத்துக்கொண்டு, தொல்காப்பியத்தில் வரையறுக்கப்பட்ட எண்வகை மெய்ப்பாடுகளை, டோபமைன், செரோடோனின், கார்டிசோல், நார்பினெஃப்ரின், ஆக்ஸிடோசின், GABA போன்ற நியூரோட்ரான்ஸ்மிட்டர்கள் மற்றும் ஹார்மோன்களின் செயல்பாடுகளால் எவ்வாறு உணர்வுகள் தோன்றுகின்றன என்று ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. அவை வேதநாயக சாஸ்திரியாரின் ஞான நொண்டி நாடகத்தில் வெளிப்பெறுமாற்றை எடுத்துரைத்து தமிழிலக்கியக் கோட்பாடுகள் உணர்வுகளை உடல் மையமான அனுபவங்களாகக் கருத்தாக்கி, நவீன உணர்ச்சி அறிவியலை முன்கூட்டியே எதிரொலித்துள்ளன என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *எண்வகை மெய்ப்பாடுகள், நியூரோ வேதியியல் நடுநிலையாளர்கள், ஞான நொண்டி நாடகம், கிறித்தவ இலக்கியம், சிற்றிலக்கியம், தொல்காப்பியம்.*

தமிழ் இலக்கியப் பரப்பிலும் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியத்திலும், தன்னிகரற்ற ஓர் இடத்தைத் தமக்கெனத் தக்கவைத்துக் கொண்டவர், தஞ்சை வேதநாயகசாஸ்திரியார். விவிலியக்கருத்துகளின் வழி தனக்கு ஏற்பட்ட மெய்ப்பாடுகளை வாசகரும் ஞானநொண்டி நாடகத்தை வாசிக்கும் போது உணரும் விதமாக எழுதிய பாடல்களில் மெய்ப்பாடுகள் வெளிபடுத்தப்பெற்றுள்ளன, மனித உணர்வுகள் (emotions) என்பது தனித்த மனநிலையின் விளைவு மட்டுமல்ல. அவை நரம்பியல் (Neuroscience), உயிர்வேதியியல் (Biochemistry), உளவியல் (Psychology), போன்ற துறைகளின் இணைவில் தோன்றுவதாகும். உடல் முழுவதும் பகிரப்பட்டுச் செயல்படும் நியூரோட்ரான்ஸ்மிட்டர்கள் (Neurotransmitters) ஒன்றோடொன்று இணைந்து, நரம்பு செல்களுக்கிடையேயான தகவல் தொடர்பை (synaptic communication) வழிநடத்தும் போது, மனதில் உணர்ச்சிகள் தோன்றி அவை மெய்ப்பாடு களாக வெளிப்படுகின்றன. இவ்வாறு மனமும் உடலும் ஒன்றிணையும் தருணத்தில் உருவாகும் உணர்ச்சி, தமிழிலக்கிய மரபில் மெய்ப்பாடு எனக் குறிப்பிடப்படுகிறது. சங்க இலக்கியம் முதல் சிற்றிலக்கியங்கள் வரை, எண்வகை மெய்ப்பாடுகள்

மனித உணர்ச்சி அனுபவத்தின் முழுமையான வரைபடமாக அமைந்துள்ளன. குறிப்பிட்ட நியூரோட்ரான்ஸ் மிட்டர்களின் கூட்டுச் செயல்பாடுகள் எவ்வாறு உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கின்றன என்பதையும், அவை ஞான நொண்டி நாடகத்தில் காணப்படும் எண்வகை மெய்ப்பாடுகளோடு எவ்வாறு பொருந்துகின்றன என்பதையும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

## ஹார்மோன்களின் இணைவில் தோன்றும் மெய்ப்பாடு

மனித மூளையில் உள்ள நியூரோ வேதியியல் நடுநிலையாளர்களின் செயல்பாடுகள் மனித மெய்ப்பாடுகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. நாள் முழுவதும் பலவிதமான உணர்ச்சிகளை நாம் அனுபவிக்கிறோம். பெரும்பாலும், இந்த உணர்ச்சிகள் நிலையற்றவை. இந்த உணர்ச்சிகள் தீவிரமாகவோ எதிர்மறையாகவோ மாறும்போது அல்லது இடைவிடாமல் இருக்கும் போது அவை நமது உயிர்வேதியியல் மற்றும் நடத்தையை வியத்தகு முறையில் பாதிக்கலாம். மூளையில் உள்ள வேதிப்பொருட்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துகின்றன. சான்றாக, நாம் ஆபத்தில் இருந்தால், நமது மூளை மன அழுத்த ஹார்மோன்களை வெளியிடுகிறது, அவை சில பகுதிகளை நியூரோட்ரான்ஸ்மிட்டர் வாயிலாக எபினெஃப்ரின் (அட்ரினலின்) கொண்டு நிரப்புவதனால் சண்டை அல்லது ஓடிப்போகும் மனநிலை தோன்றும். ஆபத்து குறையும் போது, நமது மூளை ரசாயனங்கள் வடிவில் ஓர் அமைதியான சமிக்ஞையை (காமா அமினோபுடைரிக் அசிட் (GABA)) அனுப்புவதன் வாயிலாக மன அழுத்தத்தைத் தடுக்கிறது. (மொழிபெயர்ப்பு https://www.amrita.edu/news/hormones&and&chemicals&linked&with&our&emotion/) டோபமைன், செரோடோனின், ஆக்ஸிடோசின், என்டோர்பின்ஸ், நார்பினெஃப்ரின் (அ) எபினெஃப்ரின் (அட்ரினலின்), கார்டிசோல், காமா அமினோபுடைரிக் அசிட் (GABA) என்னும் ஏழு ஹார்மோன்களின் இணைவில் எண்வகை மெய்ப்பாடுகளும் தோன்றுகின்றன. நகை, டோபமைன் செரோடோனின் இணைவிலும் அழுகை கார்டிசோல் நார்பினெஃப்ரினின் இணைவிலும் இளிவரல் செரோடோனின் ஆக்ஸிடோசினின் இணைவிலும் மருட்கை நார்பினெஃப்ரின் கார்டிசோலின் இணைவிலும் அச்சம் நார்பினெஃப்ரின் கார்டிசோல் குறைந்த காமா அமினோபுடைரிக் அசிட் (GABA) இணைவிலும் பெருமிதம் டோபமைன் செரோடோனின் இணைவிலும் வெகுளி நார்பினெஃப்ரின் டோபமைன் குறைந்த காமா அமினோபுடைரிக் அசிட் (GABA) இணைவிலும் உவகை டோபமைன் செரோடோனின் ஆக்ஸிடோசினின் இணைவிலும் தோன்றுகின்றன.

## மெய்ப்பாடு

அழகியல் கூறுகளுள் ஒன்றான மெய்ப்பாடு, பொருள் புலப்பாட்டிற்குத் துணைபுரிகிறது. மெய் என்றால் உடல், பாடு என்றால் தோன்றுவது. உடலில் தோன்றும் மாறுபாடு மெய்ப்பாடு எனப்படுகிறது. ஒருவருக்கு ஒரு நிகழ்வு நடந்தாலோ அல்லது ஒருவர் ஒன்றைப் பார்த்தாலோ அல்லது சுவைப் பொருளைச் சுவைத்தாலோ உண்டாகும் புற உடல் குறிகளே மெய்ப்பாடு ஆகும். "(கவிதை கட்டமைப்பு, ப.198) நிகழ்ச்சிக்குரியர் பேச்சைக் கேட்போர்க்கு அவர் கூறிய பொருட்கள் கண்ணெதிரிலேயே தெரியுமாறுபோலப் புலப்பட அதனால் அவர் உணர்ச்சி வயத்தவராகவே அவர்தம் உடம்பிலே சில தோற்றங்கள் புலனாகும் மெய்யிலே பொருந்திப் புறத்தாருக்குப் புலனாகும் உள்ளுணர்வு வெளிப்பாடே மெய்ப்பாடு எனப்படும்" (மெய்ப்பாடு, ப.64) என்று மு.சண்முகம்பிள்ளை குறிப்பிடுகிறார்.

தொடக்கத்தில் நாடகத்துடன் தொடர்புடையதாக இருந்த மெய்ப்பாடுகளைப் பிற்காலத்தில் புலவர்கள் பாடல்களில் பயன்படுத்த தொடங்கினர். மொழியின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படைக் கருவியாக மெய்ப்பாடுகள் அமைந்தன. செய்யுலியலில்,

**உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்**
**மெய்ப்பட முடிவது மெய்ப்பா டாகும்**
***(தொல். செய். 202)***

என்னும் சூத்திரத்திற்கு உரை எழுதிய இளம்பூரணர் செய்யுள் இயற்றுபவர் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டும் என்று கூறுவார். சங்க இலக்கியப்

பாடல்கள் அனைத்தும் மெய்ப்பாடு அமையப் பாடப்பெற்றுள்ளன. மெய்ப்பாடு மனித நடத்தையோடு தொடர்புடையது இலக்கியம் மனிதனின் நடத்தையை உணர்வுப்பூர்வமாக விளக்குவது என்ற முறையில் கவிதையில் எதோ ஒரு வகையில் மெய்ப்பாடு வெளிப்படையாகவோ நுட்பமாகவோ கட்டாயம் அமைந்திருக்கும்.

### ஞான நொண்டி நாடகத்தில் எண்வகை மெய்ப்பாடுகள்

உடலின்கண் நிகழும் வேறுபாடுகளைச் சுட்டி, உள்ளத்தின் உணர்ச்சிகளைப் புலப்படுத்துவது மெய்ப்பாடு. (இலக்கியதிறனாய்வுகளஞ்சியம், ப. 331) தொல்காப்பியர் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடுகளைச் சுட்டுகிறார்.

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெருளி உவகையென்று**
**அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப.**
**(தொல். பொருள். 247)**

இந்த மெய்ப்பாடுகளை ஒரு ஒழுங்கின்படியே வரிசைப்படுத்தியுள்ளார். உணர்வதற்கு எளிமையான "நகை" முதற்கண் இடம்பெற்றுள்ளது. அதற்கு தேர் எதிரிடையான "அழுகை" அடுத்த இடம்பெறுகிறது. அழுகையோடு தொடர்புடைய "இளிவரல்" என்ற இழிபு அதற்கு அடுத்தாற்போல் வைக்கப்பட்டுள்ளது. "மருட்கை" என்ற வியப்பும் அதனோடு தொடர்புடைய வியப்பின் காரணமாகத் தோன்றும் அச்சமும் அடுத்தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. அச்சத்திற்கு நேர் எதிரிடையான "பெருமிதம்" என்ற வீரம் அதனைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது. வீரத்திற்கு நிகழும் ஊறு காரணமாக எழும் "வெகுளி" அதற்கடுத்து வைக்கப்பட்டுள்ளது. யாவராலும் விரும்பப்படுகின்ற அறிவாலும், ஆற்றலாலும், நிரம்பி நிற்கின்ற "உவகை இறுதி மெய்ப்பாடாக முன்வைக்கப்பட்டுள்ளது. சமநிலையை ஒரு மெய்ப்பாடாகத் தொல்காப்பியர் கொள்ளவில்லை. (இலக்கியத் திறனாய்வுக் களஞ்சியம், ப. 332) இந்த எட்டு மெய்ப்பாடுகளையும் 32 ஆகப் பாகுபடுத்தலாம் என்பதையும் தொல்காப்பியத்தின் வழி அறிய முடிகிறது. வேதநாயக சாஸ்திரியாரின் ஞான நொண்டி நாடகத்திலும் எண்வகை மெய்ப்பாடுகளைக் காணமுடிகிறது.

### நகை என்னும் மெய்ப்பாடு

**எள்ளல் இளமை பேதைமை மடனென்று**
**உள்ளப் பட்ட நகைநான் கென்ப**
**(தொல். பொருள் 248)**

நகை என்பது இகழ்ச்சியினால் தோன்றும் மெய்ப்பாடாகும். கேலி பேசுதல், குழந்தை தன்மை, அறிவின்மை, அறிந்தும் அறியாதது போல் இருத்தல் என்னும் நான்கு நிலைகளில் நகை என்ற மெய்ப்பாடு தோன்றும்.

**பெண்டாட்டி மொழிகேட்ட கொடிய**
**பேயனென்பார் அதிதீயனென்பார்**
**உண்டாக்கி வைத்தவரை மறந்த**
**ஊணனென்பார் கைகாலுான னென்பார்**
**(ஆதிமனிதனை உலகந் தூற்றல் 5)**

என்ற பாடலில் மனைவி சொல் கேட்ட மூடன் என்றும் படைத்தவரை மறந்த மூடன் என்றும் இவனால் மனிதர்களுக்கு மட்டுமன்றி உயிரினங்கள் அனைத்திற்கும் துன்பம் வந்தது என்று உலக மக்கள் அனைவரும் ஞான நொண்டியை எள்ளல் (கேலி) செய்வதாக இப்பாடல் அமைந்துள்ளது.

### அழுகை என்னும் மெய்ப்பாடு

**இழிவே இழவே அசைவே வறுமையென**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே**
**(தொல். பொருள் 249)**

அழுகை என்பது அவலத்தினால் தோன்றும் மெய்ப்பாடாகும். பிறரால் தாழ்வுபடுத்தப்படுதல், உறவு, உடைமைகளை இழத்தல், தன்னிலையில் இருந்து தாழ்தல், வறுமை என்னும் நான்கு நிலைகளில் அழுகை என்ற மெய்ப்பாடு தோன்றும்.

**மதயானைக் குட்டியல்லோ சற்று**
**மட்டுப்பட்டேன் நான் கட்டுப்பட்டேன்**
**(ஞான நொண்டியின் பூருவோத்திரம் 17: 1-2)**

என்ற பாடலில் யாருக்கும் அடங்காத மதம் பிடித்த யானையின் குட்டி போன்றவன் நான், தற்போது அடங்கியிருக்கின்றேன் என்று நொண்டி கூறுவது அசைவைக் (தன்னுடைய நிலையில் இருந்து தாழ்தல்) குறிக்கும்.

***பாக்கியமெல்லாம் இழந்தேன் சாகாப்***
***பாக்கியமும்***
***வாழ்ந்தும் போயிருள் சூழ்ந்து நின்றேன்***
***(ஆதி ஞாயத் தீர்ப்பு 21:2 - 22:4)***

என்ற பாடலில் பாவத்தின் பலனாகப் பல மேன்மையையும் மரிக்காமல் வாழும் கடவுளின் அருளையும் தூய்மையையும் இழந்து இருள் சூழ நின்றேன் என்று நொண்டி தன்னுடைய நிலையில் இருந்து தாழ்ந்திருப்பதைக் கூறுவதால் இஃது இழிவைக் குறிக்கும்.

***இளிவரல் என்னும் மெய்ப்பாடு***
***மூப்பே பிணியே வருத்த மென்மையொடு***
***யாப்புற வந்த இளிவரல் நான்கே***
***(தொல். பொருள் 250)***

இளிவரல் என்பது தாழ்வுமனப்பான்மையில் தோன்றும் மெய்ப்பாடாகும். மிகுந்த முதுமை, கொடிய நோய், இடைவிடாத மனவருத்தம், ஆற்றலின்மை என்னும் நான்கு நிலைகளில் இளிவரல் என்ற மெய்ப்பாடு தோன்றும்.

***ஈவுருச்செய்து பணிந்து***
***ஏகனை முற்றும் மறக்கும்படி***
***இழந்தேன் யான் கைகால்***
***சேதிக்கப்பட்டது வாதை என்றேன்***
***(ஆதி ஞாயத் தீர்ப்பு 23,24)***

என்ற பாடல்களில் கடவுளை மறக்க வேண்டும் என்ற நட்டம் வந்தது. துயர் கிட்டி நின்றது. படைத்தவரின் சாயலில் இருந்த நான் இப்போது எல்லாம் இழந்து அறிவுகுன்றி நின்றேன். இது வரை என் கை, கால்களால் நான் வாழ்ந்ததாகக் கருதி கடவுளை மறந்திருந்த செருக்கால் வந்த இழிநிலை என்று தெளிந்தேன். எல்லாம் இறைவனால் பாதுகாக்கப்படுகிறது என்ற பொதுவான ஞானமும் இழந்து நொண்டியானேன். என் மனச் சாட்சி என்னை வாதித்தது. தவறான கனியை உண்டதால் சீவமரக்கனியை உண்டுபிழைக்க அனுமதிக்காமல் எங்களை ஏதன் வனத்திலிருந்து இறைவன் வெளியேற்றிவிட்டார் என்று நொண்டி தன்னுடைய தவறான செயலுக்கு இடைவிடாமல் வருந்துவதால் இது வருத்தத்தைக் குறிப்பிடுகிறது.

***மருட்கை என்னும் மெய்ப்பாடு***
***புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு***
***மதிமை சாலா மருட்கை நான்கே.***
***(தொல். பொருள் 251)***

மருட்கை என்பது வியப்பில் தோன்றும் மெய்ப் பாடாகும். எங்கும் காணாத ஒன்றைக் காணுதல், இயல்பில் இருந்து வேறுபட்ட சிறந்த பொருளைக் காணுதல், மிகவும் சிறிய பொருட்களைக் காணுதல், ஒரு பொருளின் வளர் நிலைகள் என்னும் நான்கு நிலைகளில் மருட்கை என்ற மெய்ப்பாடு தோன்றும்.

***சோகுப்படா முடி உடைந்து***
***தூடணத்தலை தகர்ந்து***
***ஏகப் பொருள் ஒன்றறிந்து***
***இருளொழிந்து அருள் தெளிந்து***
***(கொண்டாட்டு 3)***

என்ற பாடல் பிசாசின் மணிமுடி தகர்ந்து, அவனது பாவங்களைப் போக்கும் வழியாகக் கடவுளை அறிந்ததால் தன்னுடைய பாவ இருள் தொலைந்து இறையருள் பெற்று, இறைவனைப் பணிந்து ஞான நொண்டி எங்கும் என்றும் காணாத ஒன்றைக் காண்டதாகப் பாடுவதால் இது புதுமையைக் குறிப்பிடுகிறது.

***மலையை அணுவு செய்வான் அணுவையும்***
***மலையெனச் செய்குவனே***
***தொன் மறையையொரு சொல்லாக்கி***
***(ஞான நொண்டியின் பூருவோத்திரம் 8-9)***

என்ற பாடலில் யூத மரபில் தாவீது அரசனின் வம்சத்தில் வந்தவரான கிறித்து, மலையை அணுவாக்குவார், அணுவை மலையாக்குவார், பெரிய அலையைத் துளியாக்குவார், ஒரு துளியைக் கடலாக்குவார். இரவைப் பகலாக்குவார். பகலை இரவாக்குவார். அதுவும் ஒரு கணத்தில்! ஒரு சொல்லை வேதமாக்குவார். பழைய வேதங்களை ஒரு சொல்லில் அடக்குவார் என்று இயல்பில் இருந்து மாறுபட்ட பெருமையைக் குறிப்பிடுகிறது.

***தட்சணமே கால் வளர்ந்து***
***தறித்த கையும் நீண்டு***
***வந்தனன் இங்காடி***
***(ஞான நொண்டி கைகால் வளர்ந்தது 19)***

என்ற பாடலில் கல்வாரி மலையில், சிலுவையில் மரித்த கிறித்துவை என் விசுவாசக் கண்களால் கண்டு அவரது விலாவில் பாய்ந்த இரத்தத்தில் என்

கரம்காலைத் தோய்த்துக் கொண்டேன். அக்கணமே என் பாவ வினை தொலைந்தது. அதன் விளைவாகக் கால் வளர்ந்தது, கை நீண்டது, அந்த அற்புதத்தை ஆடிப்பாடிக் கொண்டு இங்கு (அரங்குக்கு) வந்தேன் என்று தன் உடல் உறுப்புகள் வளர்ச்சிப் பெற்றதைப் பற்றிக் கூறுவதால் இஃது ஆக்கத்தைக் குறிப்பிடுகிறது.

### அச்சம் என்னும் மெய்ப்பாடு

***அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்***
***பிணங்கல் சாலா அச்சம் நான்கே***
***(தொல். பொருள் 252)***

அச்சம் என்பது அஞ்சத்தகுந்தவற்றால் தோன்றும் மெய்ப்பாடாகும். பேய், பூதம் போன்ற வருத்தும் இயல்புடையவையாலும், கொடிய விலங்குகள், திருடன், அரசன், தலைவன் என்னும் நான்கு நிலைகளில் அச்சம் என்ற மெய்ப்பாடு தோன்றும்.

***பண்டு நரகின் இருண்டவழியின்***
***உருண்டு சிதறிய வண்ட நெறிவழி***
***அற்புதத்தொரு தற்பரந் துணையே***
***முப்போதுமே. (கடவுள் வாழ்த்து 6)***

என்ற பாடலில் ஞான நொண்டி நாடகத்தின் முழுப் பொருளையும் அறிந்து நன்றாகப் பாடும்போது தீயவர்கள் மனம் நடுங்க, பேய்கள் கலங்க, நரகக் கோட்டைகள் இடிய, விண்ணவர்களின் தலைவனாகிய இறைவன் எனக்கு அருள் வழங்குவாராக என்று இறைவனின் தன்மைகளையும் வருத்தும் இயல்புடைய பேய்களின் நிலையைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

### பெருமிதம் என்னும் மெய்ப்பாடு

***கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்***
***சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே.***
***(தொல். பொருள் 253)***

பெருமிதம் என்பது வீரத்தில் தோன்றும் மெய்ப் பாடாகும். கல்வி உயர்வு, போர் வீரம், புகழ், வள்ளல் குணம் என்னும் நான்கு நிலைகளில் பெருமிதம் என்ற மெய்ப்பாடு தோன்றும். அஞ்ச வேண்டிய இடத்தில் அஞ்சாமல் இருத்தல் என்று பேராசிரியரும் உள்ளத்தின் கண் காணப்படும் வீரம் என வெள்ளைவாரணரும் குறிப்பிடுகின்றனர்.

***அருளிலங்குந் தமது திருச்சாயலாக***
***ஆதிமானிடனை மின்னோடமைத்தார் காவில்***
***தெருளிலங்கும் நால்வரமும் அளித்து நித்திய***
***சீவனையுந் தந்து சிறந்திருக்கச் செய்த***
***பொருளிலங்கும் பராபரன்***
***(ஆரம்பம் விருத்தம் 1-5)***

என்ற பாடலில் ஆதிமனிதனை தமது சாயலில் ஏதன் வனத்தில் அழகாகப் படைத்து, அவனுக்குச் சாவாமை முதலிய நால்வரங்களைக் கொடுத்து நித்திய வாழ்வையும் வழங்கி, சிறப்புடன் வாழச் செய்த இறைவனின் வள்ளல்தன்மையைப் பற்றிக் கூறுவதால் இது கொடையைக் குறிப்பிடுகிறது.

### வெகுளி என்னும் மெய்ப்பாடு

***உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன***
***வெறுப்ப வந்த வெகுளி நான்கே***
***(தொல். பொருள் 254)***

வெகுளி என்பது வெறுப்பினால் தோன்றும் மெய்ப்பாடாகும். உடல் உறுப்புகளை அறுத்தல், கடைநிலை மக்களைத் துன்புறுத்தல், கோல்கொண்டு அடித்தல், வைதல், உயிரை எடுக்க முயலுதல் போன்ற நான்கு நிலைகளில் வெகுளி என்ற மெய்ப்பாடு தோன்றும்.

***இட்ட தீர்ப்பின்படி வெட்டனவாய்த்***
***துன்றி ஞானக் கை காலை இருள்***
***துட்டப் பயல்வந்து வெட்டினனே***
***(ஆதி ஞாயத் தீர்ப்பு 21)***

என்ற பாடலில் இறைவனின் ஆணைக்கிணங்க இருள் என்ற பாவம் வந்து என் கை, காலை வெட்டிவிட்டான் எனத் தன்னுடைய உடல் உறுப்புகளை இழந்ததைப் பற்றிக் கூறுவதால் இஃது உறுப்பறையைக் குறிப்பிடுகிறது .

***சீவப் பிராணிகட்கும் இவனால்***
***சீவ அவஸ்தை அதிநோவும் என்பார்***
***(ஆதிமனிதனை உலகந் தூற்றல் 7: 1-2 )***
***அச்சமில்லாதிருந்தேன் இப்போது***
***அஞ்சவுங் கெஞ்சவுந் தஞ்சமிலா***
***எச்சமயத்தோரும் என்னை***
***இட்டமிலாது திட்டினரே***
***(ஆதிமனிதனை உலகந் தூற்றல் 24)***

என்ற பாடல்களில் உலக உயிர்கள் அனைத்திற்கும் துன்பம் நேரிடக் காரணமான ஞான நொண்டியை

விலங்குகள் பறவைகள் பூச்சிகள் என அனைத்தும் பகைத்து வெறுத்து ஏசத்தொடங்கின. இஃது அலையைக் குறிப்பிடுகிறது.

**உவகை என்னும் மெய்ப்பாடு**

**செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென்**
**அல்லல் நீத்த உவகை நான்கே.**
***(தொல். பொருள் 255)***

உவகை என்பது பிறரைத் துன்புறுத்தி அடையும் மகிழ்ச்சியில்லாத இயல்பாக உண்டாகும் மகிழ்ச்சியினால் தோன்றும் மெய்ப்பாடாகும். செல்வாக்கு, ஐம்புலன் நுகர்வு, தலைவன் தலைவியின் புணர்ச்சி, விளையாட்டு போன்ற நான்கு நிலைகளில் வெகுளி என்ற மெய்ப்பாடு தோன்றும்.

**பெத்தலேக மாநகரில் மெத்தப்**
**பேரும் பெற்றேன்**
**பெரிய நாசேரத்தும் என்றன்**
**பந்துக்கள் வாழ்ந்திருக்கும் பதிதான்**
***(ஞான நொண்டியின் பூருவோத்திரம் 1-4)***

என்ற பாடல்களில் நொண்டி, பெத்தலகேம் மாநகரில் சீரோடும் பேரோடும் வாய்ந்ததாகவும் யூதேயா தன் தேசம் என்றும் கலிலேயா தன் காணியாட்சிக்குட்பட்ட நாடு என்றும் பொன் விளையும் சமாரியா பெராயா தேசங்களும் தான் வாழ்ந்த தேசங்கள் எனவும் நாசரேத்தில் தன்னுடைய உறவினர் வாழ்ந்தனர் என்றும் தனது செல்வாக்கைக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளன.

**முடிவுரை**

இலக்கியங்களில் மாந்தர்களின் உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தும் அடிப்படை உத்தியாக மெய்ப்பாடுகள் விளங்குகின்றன ஞான நொண்டி நாடகத்தில் உள்ள பாடல்களில் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடுகளும் காணப்படுவதை இவ்வாய்வின் வாயிலாக அறிய முடிகின்றது. அவை நரம்பியல் மற்றும் உடலியல் செயல்முறைகளால் வடிவமைக்கப் படும் உடல்-மையமான (embodied) நிகழ்வுகளாக இருப்பதை நிறுவுகிறது. ஞான நொண்டி நாடகத்தில் மெய்ப்பாடு நாடக மொழியின் வழி வெளிப்படுவது, தமிழ்க் கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் பக்தி அல்லது நெறிப்படுத்தல் சார்ந்த உரையாடல்களுக்குள் மட்டுமே சுருங்காமல், உணர்வு, சிந்தனை, உடல் மையம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் தொடக்கக் கால இடைத்துறை (interdisciplinary) அறிவியல் உரையாடல்களாகவும் செயல்பட்டுள்ளன என்பதை உணர்த்துகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. சண்முகம் செ.வை., கவிதை கட்டமைப்பு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2013.
2. சண்முகம் பிள்ளை மு., தொல்காப்பியம் - இளம்பூரணம் பொருளதிகாரம் (மூன்றாம் பகுதி), சென்னை: முல்லை நிலையம், 2014.
3. மோசசு மைக்கேல் ஃபாரடே, முத்தமிழ் முத்துக்கள் மூன்று, சென்னை: கிருபா பதிப்பகம், 2015.
4. வேதசகாயகுமார் எம்., இலக்கியத் திறனாய்வுக் களஞ்சியம், அடையாளம் பதிப்பகம், 2021.
5. கிரிஸ்டல் ரேபோல், சிறந்த மனநிலைக்கு உங்கள் ஹார்மோன்களை எவ்வாறு ஹேக் செய்வது - https://www.healthline.com/health/hap-py&hormone, மே 28, 2025.
6. மங்கலம் ராமநாதன்,நமது உணர்ச்சியுடன் தொடர்புடைய ஹார்மோன்கள் மற்றும் இரசாயனங்கள் - https://www.amrita.edu/news/hor-mones&and&chemicals&linked&with&our&emotion/, 2018.
7. வெல்னஸ் மருத்துவமனை, உணர்ச்சிகளின் நரம்பியல் வேதியியல்: உணர்வுகளுக்குப் பின்னால் உள்ள அறிவியலை வெளிப்படுத்துதல் & https://wellnesshospitals.in/the&neurochemistry&of&emotions&unveiling&the&-science&behind&feelings/, Jun 5, 2023